கக்கனுக்கு மரியாதை...

தில்லியில் உள்ள தனது அதிகாரபூர்வ மாளிகையில் வியாழக்கிழமை இந்திய விடுதலைப் போராட்ட தியாகியும் தமிழக முன்னாள் அமைச்சருமான மறைந்த கக்கனின் பிறந்த நாளையொட்டி அவரது படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன்.

குடியரசு துணைத் தலைவர் இன்று லடாக் பயணம்

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, ஜூன் 18: குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மூன்று நாள்கள் அரசுமுறை பயணமாக வெள்ளிக்கிழமை (ஜூன் 19) லடாக் செல்லவுள்ளார். ஜூன் 19 முதல் 21 வரை லடாக் யூனியன் பிரதேசத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். இது குடியரசு துணைத் தலைவராக பதவியேற்ற பிறகு அந்த யூனியன் பிரதேசத்துக்கு அவர் மேற்கொள்ளும் முதலாவது பயணமாகும்.

இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக, ஜூன் 20-ஆம் தேதி 'துடிப்பான கிராமம்' என அறிவிக்கப்பட்டுள்ள லூகுங் என்ற கிராமத்துக்குச் செல்லும் குடியரசு துணைத் தலைவர், அங்கு உள்ளூர் சுயஉதவிக் குழுக்களுடன் கலந்துரையாடவுள்ளார். அதைத்தொடர்ந்து, 'துடிப்பான கிராமங்கள் திட்டத்தின்' கீழ் எல்லைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை அவர் பார்வையிடுவார்' என்று அவரது செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். இத்துடன் லடாக்கில் உள்ள போர் நினைவிடத்துக்கு குடியரசு துணைத் தலைவர் சென்று அஞ்சலி செலுத்துவார். ஜூன் 21-ஆம் தேதி லே பகுதியில் நடைபெறும் சர்வதேச யோகா தினகொண்டாட்டங்களில் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொள்ளவுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமித் ஷாவுடன் அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் ஆலோசனை

புது தில்லி, ஜூன் 18: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் வியாழக்கிழமை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

பிரான்ஸில் புதன்கிழமை நடைபெற்ற ஜி7 நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டின் போது, பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் சந்தித்துப் பேசினர். அப்போது, இரு நாடுகளிடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த நடைமுறைகளை விரைவுபடுத்தும்படி இரு நாட்டு அதிகாரிகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் அறிவுறுத்தினர். இந்தச் சூழலில், அமித் ஷா - செர்ஜியோ கோர் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதுகுறித்து அமித் ஷா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'அமெரிக்க தூதர் செர்ஜியோ கோருடனான சந்திப்பின்போது, இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, பாதுகாப்பு ஒத்துழைப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது' என்று குறிப்பிட்டார்.

புது தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை வியாழக்கிழமை சந்தித்த அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர்.

செர்ஜியோ கோர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'அமைச்சர் அமித் ஷாவுடனான சந்திப்பில் பயங்கரவாதம், போதைப்பொருள் தடுப்பு, எல்லைகள் பாதுகாப்பு, இரு நாடுகள் தரப்பிலும் கூட்டாக குற்றவாளிகளை நீதியின் முன் கொண்டுவருவது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது' என்று குறிப்பிட்டார்.

மேலும், 'ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்றுவிட்டு இந்தியா திரும்பி வந்துள்ளேன். உச்சி மாநாட்டுக்கு இடையே இந்தியா - அமெரிக்கா இடையே நடைபெற்ற இருதரப்பு ஆலோசனையில் பல நேர்மறையான விஷயங்கள் எட்டப்பட்டுள்ளன' என்றும் குறிப்பிட்டார்.

ஜார்க்கண்ட் மாநிலங்களவைத் தேர்தல்: ஜேஎம்எம், சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி

கொல்கத்தா, ஜூன் 18: ஜார்க்கண்டில் 2 மாநிலங்களவை இடங்களுக்கு வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்) வேட்பாளரும், எதிர்க்கட்சியான பாஜக ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளரும் வெற்றி பெற்றனர்.

சட்டப் பேரவையில் பாஜக தலைமையிலான கூட்டணிக்கு போதிய எம்எல்ஏக்கள் பலம் இல்லாத போதிலும், ஆளும் இண்டி கூட்டணி எம்எல்ஏக்கள் கட்சி மாறி வாக்களித்ததால், சுயேச்சை வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸின் வேட்பாளர் தோல்வியடைந்தார்.

கர்நாடகம், ஆந்திரம், குஜராத் உள்ளிட்ட 10 மாநிலங்களில் விரைவில் பதவிக் காலம் நிறைவடையும் 24 மாநிலங்களவை எம்.பி. இடங்களுக்கான தேர்தலும், தமிழகம், மகாராஷ்டிரம், ஒடிஸாவில் காலியான தலா ஓரிடத்துக்கான இடைத்தேர்தலும் அண்மையில் அறிவிக்கப்பட்டது.

மொத்தம் 27 இடங்களுக்கான இந்தத் தேர்தலில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்பட 24 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வாகினர். இதில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் 19 பேர் ஆவர்.

ஜார்க்கண்டில் 2 இடங்களுக்கும், மிஸோரமில் ஓரிடத்துக்கும் போட்டி எழுந்ததால், இரு மாநிலங்களிலும் வியாழக்கிழமை தேர்தல் நடைபெற்றது.

ஜார்க்கண்டில்...: 81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்க்கண்ட் பேரவையில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான இண்டி கூட்டணிக்கு 56 எம்எல்ஏக்கள் (ஜேஎம்எம் 34, காங்கிரஸ் 16, ஆர்ஜேடி 4, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) லிபரேஷன் 2) உள்ளனர்.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 24 எம்எல்ஏக்கள் (பாஜக 21, லோக் ஜன சக்தி (ராம் விலாஸ்), அனைத்து ஜார்க்கண்ட் மாணவர் சங்கம், ஐக்கிய ஜனதா தளம் தலா 1) உள்ளனர்.

இம்மாநிலத்தில் 2 மாநிலங்களவை எம்.பி. இடங்களுக்கு அறிவிக்கப்பட்ட தேர்தலில் ஜேஎம்எம் வேட்பாளர் வைத்யநாத் ராம், காங்கிரஸ் வேட்பாளர் பிரணவ் ஜா, பாஜக ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளரும் தொழிலதிபருமான பரிமள் நாத்வானி ஆகியோர் களமிறங்கினர். ஒரு எம்.பி. தேர்வாக குறைந்தபட்சம் 28 எம்எல்ஏக்களின் வாக்குகள் தேவை.

சட்டப் பேரவை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலில் முதல்வரும், ஜேஎம்எம் தலைவருமான ஹேமந்த் சோரன், பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பாபுலால் மராண்டி, பேரவை காங்கிரஸ் குழுத் தலைவர் பிரதீப் யாதவ் உள்ளிட்ட எம்எல்ஏக்கள் வாக்களித்தனர்.

கட்சி மாறி வாக்களித்த எம்எல்ஏக்கள்: மாலையில் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 30 வாக்குகளுடன் ஜேஎம்எம் வேட்பாளர் வைத்யநாத் ராமும், 28 வாக்குகளுடன் பாஜக ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர் பரிமள் நாத்வானியும் வெற்றி பெற்றனர்.

காங்கிரஸ் வேட்பாளர் பிரணவ் ஜாவுக்கு 20 வாக்குகளே கிடைத்தன. இண்டி கூட்டணியில் எம்எல்ஏக்கள் கட்சி மாறி வாக்களித்ததால் காங்கிரஸ் தோற்றுள்ளது.

பாஜக எம்எல்ஏக்கள் இருவர், காங்கிரஸ் எம்எல்ஏ ஒருவரின் வாக்கு செல்லாததாக அறிவிக்கப்பட்டது.

ராஷ்ட்ரீய ஜனதா தளம், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) லிபரேஷன் கட்சிகளைச் சேர்ந்த எம்எல்ஏக்கள், தங்களுக்கு வாக்களிக்காமல் துரோகம் இழைத்துவிட்டதாகவும், பாஜக குதிரை பேரத்தில் ஈடுபட்டதாகவும் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா நிறுவனர் சிபு சோரன் மறைவு மற்றும் பாஜக எம்.பி. தீபக் பிரகாஷ் பதவிக் காலம் நிறைவால் இந்தத் தேர்தல் நடைபெற்றுள்ளது.

மிஸோரமில்...: மிஸோரமில் ஒரு மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு ஆளும் ஸோரம் மக்கள் இயக்கம் கட்சி சார்பில் லால்ட்லுவாங்கிமா, முக்கிய எதிர்க்கட்சியான மிஸோ தேசிய முன்னணி சார்பில் ஜோதன்சாங்கி ஹமர் ஆகியோர் போட்டியிட்டனர்.

40உறுப்பினர்களைக்கொண்ட மிஸோரம் பேரவையில் ஸோரம் மக்கள் இயக்கத்துக்கு 27, மிஸோ தேசிய முன்னணிக்கு 10, பிற எதிர்க்கட்சிகளான பாஜகவுக்கு 2, காங்கிரஸுக்கு 1 எம்எல்ஏவும் உள்ளனர்.

சட்டப் பேரவையில் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலில், ஸோரம் மக்கள் இயக்கம் வேட்பாளர் லால்ட்லுவாங்கிமா 26 வாக்குகளுடன் வெற்றி பெற்றார். மிஸோ தேசிய முன்னணி வேட்பாளருக்கு 10 வாக்குகள் கிடைத்தன. பாஜக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் வாக்குப்பதிவில் பங்கேற்கவில்லை.

இண்டி கூட்டணி எம்எல்ஏக்கள் கட்சி மாறி வாக்களிப்பு

பாஜக கூட்டணி பலம் 150-ஆக உயர்வு

தற்போதைய மாநிலங்களவைத் தேர்தலுக்குப் பிறகு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் பலம் 150-ஆக உயர்ந்துள்ளது. மேற்கு வங்கத்தில் அண்மையில் 3 திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.க்கள் ராஜிநாமா செய்த நிலையில், விரைவில் அந்த இடங்களுக்கு இடைத்தேர்தல் நடைபெறும்.

திரிணமூல் காங்கிரஸ் பிளவுபட்டுள்ளதால், 3 இடங்களையும் பாஜக கைப்பற்ற வாய்ப்புள்ளது. இதைத் தொடர்ந்து, பாஜக கூட்டணி பலம் 153-ஆக அதிகரிக்கும். மாநிலங்களவையில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கு 163 எம்.பி.க்கள் தேவை. அந்த எண்ணிக்கையை நோக்கி, பாஜக கூட்டணி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

எரிபொருள் விலை உடனடியாக குறைக்கப்படாது: மத்திய அமைச்சர்

திருச்சூர், ஜூன் 18: 'எரிபொருள் சில்லறை விற்பனை விலை உடனடியாக குறைக்கப்பட வாய்ப்பில்லை' என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி தெரிவித்தார்.

ஈரான் மீது அமெரிக்க - இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்த தொடங்கிய கடந்த பிப்ரவரி மாதம் முதல் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை முன்பிருந்ததைவிட 50 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்தது.

இதனால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை உயர்த்தப்பட்டதோடு, சமையல் எரிவாயு விலையும் உயர்த்தப்பட்டது. கடந்த மே 15-ஆம் தேதிமுதல் 11 நாளிகளில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ஒட்டுமொத்தமாக ரூ. 7.50 அளவுக்கு உயர்த்தப்பட்டது.

அதுபோல, வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை மார்ச் மாதம் ரூ. 60 உயர்த்தப்பட்ட நிலையில், மீண்டும் மே மாதம் ரூ. 29 அளவுக்கு உயர்த்தப்பட்டது. இதனால், அதன் விலை ரூ. 918.50 என்ற அளவிலிருந்து ரூ. 957.50-ஆக உயர்ந்தது.

இந்த நிலையில், ஈரான் - அமெரிக்கா இடையே அமைதி ஒப்பந்தம் கையொப்பமானதைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நிரிணை பகுதியில் சரக்கு கப்பல்களின் தடையற்ற போக்குவரத்து தொடங்கியுள்ளதோடு, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையும் குறையத் தொடங்கியுள்ளது. இதனால், எரிவாயு சில்லறை விற்பனை விலை குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இதுகுறித்து திருச்சூரில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி பதிலளித்து கூறியதாவது:

மேற்காசிய போர் காரணமாக, எண்ணெய் நிறுவனங்கள் கடும் பாதிப்புகளைச் சந்தித்தன. நிறுவனங்களுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க மத்திய அரசு உதவியது.

இதனால், மத்திய அரசுக்கு சுமார் ரூ. 12,000 கோடி வரை இழப்பு ஏற்பட்டது. ஆனால், எந்தவொரு மாநிலமும் எரிபொருள்கள் மீதான கலால் வரியை குறைத்து, தங்களின் வருவாயைக் குறைத்துக்கொள்ள முன்வரவில்லை.

அதுமட்டுமின்றி, கச்சா எண்ணெய் கப்பல்களின் முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணை பகுதியில், தற்போது, கடும் கப்பல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை சீரடைய சில நாள்கள் ஆகும்.

எனவே, குறைந்த விலையிலான கச்சா எண்ணெய் சரக்கு இந்தியாவை வந்தடைவது உள்ளிட்ட பல்வேறு காரணிகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே, பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை மற்றும் சமையல் எரிவாயு விலைகள் உடனடியாக குறைக்கப்பட வாய்ப்பில்லை என்றார்.

சட்டவிரோத செயல்களுக்கான தளமாக டெலிகிராம் பயன்படுத்தப்படுகிறது

தில்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு குற்றச்சாட்டு

புது தில்லி, ஜூன் 18: சட்டவிரோத செயல்களுக்கான தளமாக டெலிகிராம் பயன்படுத்தப்படுவதாக, தில்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த மே மாதம் 3-ஆம் தேதி நீட் இளநிலை மருத்துவ கல்வி நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் இந்தத் தேர்வுக்கான வினாத்தாள் கசிந்ததாக வெளியான தகவலை அடுத்து, அந்தத் தேர்வை மத்திய அரசு மே 12-ஆம் தேதி ரத்து செய்தது. பிறகு ரத்து செய்யப்பட்ட தேர்வுக்கு பதிலாக மறு தேர்வு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, வரும் 21-ஆம் தேதி மறு தேர்வு நடைபெற உள்ளது.

ஆதலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, டெலிகிராம் செயலி மூலம் நீட் தேர்வு வினாத்தாள்கள் கசிவதை தடுக்கும் நோக்கில், அந்த செயலிக்கு வரும் 22-ஆம் தேதி வரை நாடு முழுவதும் மத்திய அரசு இடைக்கால தடை விதித்துள்ளது. இதை எதிர்த்து, தில்லி உயர் நீதிமன்றத்தில் டெலிகிராம் நிறுவனம் வழக்குத் தொடுத்துள்ளது. இந்த வழக்கு, தில்லி உயர் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு சார்பில், டெலிகிராம் நிறுவன வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'எண்ம குற்றங்கள், கசிந்த வினாத்தாளை பரப்புதல், நிதி மோசடிகள், பயங்கரவாத செயல்கள், போதை மருந்து கடத்தல், சிறார்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களுக்காக டெலிகிராம் செயலி பயன்படுத்தப்படுகிறது. மிரட்டல்கள் விடுக்கும் நபர்களுடன் தொடர்புடைய புதிய கருப்பு தளமாக டெலிகிராம் உருவெடுத்துள்ளது. இணைய தள லிங்க் மூலம் சட்டவிரோத செயல்களுக்கு டெலிகிராமை கிரிமினல்கள் பயன்படுத்துவது தற்போது அதிகரித்துள்ளது. அந்த லிங்குகளை வைத்து கிரிமினல்களை கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. 2025-இல் மட்டும் டெலிகிராம் மூலம் ரூ.3,086 கோடிக்கும் கூடுதலாக மோசடி நடந்திருப்பதாக 2.75 லட்சத்துக்கும் மேல் புகார்கள் வந்துள்ளன' என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனர் துஷார் மேத்தா ஆஜராகி வாதாடுகையில், 'டெலிகிராம் செயலி தொடர்ந்து தீவிரவாத செயல்களுக்கு பயன்படுத்தப்படுவதாக தகவல் வருகிறது. அந்த செயலி வடிவமைப்பில் உள்ள பிரச்னை காரணமாக, சட்ட அமலாக்கத் துறையினர் பல்வேறு சவால்களை சந்திக்கின்றனர்' என்றார்.

அப்போது, தேர்வுகளில் ஆஜராகும் சில குடிமக்களுக்காக எப்படி டெலிகிராமை பயன்படுத்தும் 15 கோடி மக்களின் உரிமைகளை தடுத்து நிறுத்த முடியும் என அரசுத் தரப்பிடம் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. பின்னர், இருதரப்பும் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை உயர்நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

நாடு முழுவதும் மேலும் 3 கோடி குடும்ப அட்டைகள் வழங்க வாய்ப்பு

மத்திய அமைச்சர் தகவல்

புது தில்லி, ஜூன் 18: நாடு முழுவதும் மேலும் 3 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட வாய்ப்புள்ளதாக, மத்திய உணவுத் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி வியாழக்கிழமை தெரிவித்தார்.

பொது விநியோக முறை (பிடிஎஸ்) பட்டியல்களில் இருந்து 2.21 கோடி தகுதியில்லாத குடும்ப அட்டைகள் மாநில அரசுகளால் களையெடுக்கப்பட்டதைக் குறிப்பிட்டு, மத்திய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தில்லியில் அதிநவீன கிடங்குகள் அமைப்புமுறையை வியாழக்கிழமை தொடங்கிவைத்த மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: பொது விநியோக முறையில் பலனடையத் தகுதியில்லாத 8.51 கோடி பயனாளிகள் கண்டறியப்பட்டு, நீக்க நடவடிக்கைக்காக மாநிலங்களிடம் பட்டியல் ஒப்படைக்கப்பட்டது.

மாநிலங்கள் தங்களின் சொந்த நடைமுறைகளைப் பின்பற்றி, நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன. அதன்படி, 2.21 கோடி குடும்ப அட்டைகள் மாநிலங்களால் திரும்பப் பெறப்பட்டுள்ளன. மற்றொருபுறம், தகுதியுள்ள பயனாளிகளை இணைக்க மாநிலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, நாடு முழுவதும் மேலும் 3 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக நாட்டில் தற்போது 79 கோடி பயனாளிகள் உள்ளனர். பொது விநியோக முறை எண்மமயமாக்கலின் மூலம் மேற்கண்ட திட்டத்தின் கீழ் 98.5 சதவீத உணவு தானிய விநியோகம், ஆதார் பயோமெட்ரிக் சரிபார்த்தலுடன் இணைந்த மின்னணு கருவி மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

பொது விநியோக முறையின் கீழ் நவீன கிடங்குகள், பணிமனைகள் உள்பட அனைத்து செயல்பாடுகளிலும் புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. 100 சதவீத எண்ம விநியோக அமைப்புமுறை என்ற இலக்கை நோக்கி மத்திய உணவு அமைச்சகம் செயல்பட்டு வருகிறது.

பிரதமரின் இலவச உணவு தானியத் திட்டம் உள்பட பல்வேறு சமூக நலத் திட்டங்களின் அமலாக்கத்தால் நாட்டில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

Chola
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032. கிளை அலுவலகம்: 1வது தளம் எண்.42 பச்சையப்பன் தெரு காஞ்சிபுரம் - 631501

சுவாதீன அறிவிப்பு (விதி 8 (1) -ன் கீழ்) (அசையா சொத்துக்காக)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுக் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-ன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-ன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பி குறிப்பிடப்பட்டுள்ள நாள்படியான நிலுவைத்தொகையை வட்டியுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்கள் அத்தொகையினை செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-ன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி கீழ் குறிப்பிட்டுள்ள நாள் படி நிறுவனத்தின் அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்கும் குறிப்பாகவும் பொதுமக்களுக்கும் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய தொகை, வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் சேர்த்து செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். கடனீட்டுச் சட்டத்தின் பிரிவு 13 (8)-ன் படி மொத்த நிலுவைத் தொகையையும் எல்லாச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் விற்பனை அறிவிப்புக்கு முன் செலுத்திக் கடனீட்டுச் சொத்தைக் கடன்தாரர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

கடன் கணக்கு எண். HE01NAK00000076832; கடன்தாரர் பெயரும் முகவரியும் : 1. எஸ். ரமேஷ்குமார் (விண்ணப்பதாரர்), 2. எஸ். ரேணுகாதேவி (இணை விண்ணப்பதாரர்), 3. என். சீனிவாசன் (இணை விண்ணப்பதாரர்), அனைவரும் வசிக்கும் முகவரி: எண்.24, கந்தன் சாலை, ஸ்ரீ முருகன் நகர், வையாவூர் சாலை, கோனேரிகுப்பம், காஞ்சிபுரம் - 631 502, 4. எம்/ஸ். விக்கி டிபன் சென்டர் (அதன் உரிமையாளர் ரேணுகாதேவி (இணை விண்ணப்பதாரர்) அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது), எண். 28, கிழக்கு ராஜா வீதி, காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631 502; **கோரிக்கை அறிவிப்பு தேதி:** 09/04/2026; **நிலுவைத் தொகை:** 09/04/2026 அன்றைய தேதியின்படி ரூ.23,20,244.00/- மற்றும் அதற்கான வட்டி. ; சுவாதீனத் தேதி : 16-06-2026, **அசையா சொத்தின் விவரங்கள்:** சொத்து திருமதி. எஸ். ரேணுகாதேவி (இணை விண்ணப்பதாரர்) என்பவருக்குச் சொந்தமானது:- காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் தாலுகா, எண்.62, கோனேரிகுப்பம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் நகர், மனை எண்.24, புல எண்.240/6, பட்டா புல எண்.240/10-ன்படி அமைந்த வீடு மற்றும் வீட்டு மனை முழுவதும், இதன் பரப்பளவு 1725 சதுர அடி ஆகும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.15, தெற்கு: கந்தன் தெரு, கிழக்கு: புல எண்.240/4 (காலி நிலம்), மேற்கு: மனை எண்.23. இதற்கு இடைப்பட்ட வீடு மற்றும் வீட்டு மனையின் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 30 அடி, தெற்குப் பக்கம் 39 அடி மற்றும் வடக்கு தெற்காக இருபுறமும் 50 அடி, ஆக மொத்தம் 1725 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் மற்றும் மின் இணைப்புடன் கூடிய நிலம். இச்சொத்து காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் இணை-I, காஞ்சிபுரம் சார்பதிவாளர் மாவட்டத்திற்கு உட்பட்டது.

தேதி: 19-06-2026
இடம் : காஞ்சிபுரம்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

IDBI BANK
ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கி லிட்-ன் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.66,24,881/- (31.05.2026 தேதி அன்று)** தொகையை **திருமதி.ரத்னா தேவி.S மற்றும் திரு.மணிபாரதி.S,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, **கொள்நிலை சுவாதீனம் (Physical Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **10.07.2026** தேதியில் **(காலை 10.30 முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.60,00,000/-** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.6,00,000/-.**

அசையாச் சொத்து விபரம்

கோயம்புத்தூர் மாவட்டம் - 641 041, கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, எண்.4, வீரபாண்டி கிராமத்தில் சர்வே எண்.312/2A3, "ஸ்ரீ ராம் கார்டன்ஸ்" ல் அமைந்த மனை எண்.A15 வடகிழக்குப் பகுதி, A16 கிழக்குப் பகுதியில் 1578 சதுர அடி (1350 சதுர அடி கட்டப்பட்ட பகுதி) விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து திரு.S.மணிபாரதி பெயரில் உள்ளது.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 18.06.2026
இடம் : கோயம்புத்தூர்
ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்